[2019 ஜூலை 4

1 ஏக்கர், 2½ ஏக்கர் பரப்பளவிற்குக்கீழ் உள்ள சாலைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு தமிழக வனத் துறையால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேலும், அவர் குறிப்பிட்ட பகுதிகள் குறித்த விவரங்களை அரசுக்குத் தெரிவித்தால், நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, வனச் சட்டங்களுக்குட்பட்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

மாவட்டக் கல்வி அலுவலகக் கட்டடம்

***48882—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கின்ற மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். அதற்கான இடத்தைத் தேர்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு துறையின் சார்பாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்

2019 ஜூலை 4]

அவர்கள் அதை ஏற்று, அதற்கான இடத்தை இத்துறைக்கு வழங்கினால், அந்த இடத்தில் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தமிழக மக்களின் நலனுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து, சோதனைகள் அனைத்தையும் சாதனைகளாக்கி, சாதனைகள் ஒவ்வொன்றையும் சரித்திரமாக்கி, தமிழக மக்களுக்காக சிறப்பாக ஆட்சி புரிந்துவரும் கொங்கு நாட்டுத் தங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-20

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் துணையாக இருந்து, தமிழக மக்களுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்கும் தென்பாண்டி சிங்கம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் ஆட்சி நிலைத்து நிற்பதற்கு சாத்தூர் சட்டமன்ற இடைத்தேர்தலில் தனக்கே உரிய பாணியில் அல்லும் பகலும் அயராது உழைத்து, சாத்தூர் சட்டமன்ற இடைத்தேர்தலில் வெற்றிபெற்று, வெற்றிக் கனியை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களில் சமர்ப்பித்த, வெற்றி நாயகன் விருதுநகர் மாவட்ட மக்கள் மற்றும் தொண்டர்களின் பாதுகாவலனாகத் திகழ்ந்துவரும் விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழகத்தின் பால் வளத் துறை அமைச்சருமான மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய, எங்கள் மாண்புமிகு அண்ணன் ராஜேந்திர பாலாஜி அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட கல்வி அலுவலகம் சுமார்

[2019 ஜூலை 4

9 ஆண்டுகளாக திரு.வி.க. நகராட்சி மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்கட்டடத்தில் இடவசதி குறைவாக உள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் ராஜபாளையம் பகுதியில் 427 பள்ளிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் அரசுக்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்து தருகின்றேன். எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தை விரைவில் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்த இடத்தை நம்முடைய பள்ளிக் கல்வித் துறைக்காக வழங்கினால், கட்டடங்கள் கட்டுவதற்கு உடனடியாக மதிப்பீடுகள் தயாரித்து, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதேபோல, சிவகாசி, அருப்புக்கோட்டையிலும் மாவட்டக் கல்வி அலுவலகம் துவங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கும் இடம் தருவார்களேயானால் அதற்கும் வருகின்ற ஆண்டிலேயே கட்டடம் கட்ட பரிசீலிப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதெல்லாம் உடனே கொடுக்கின்ற, பள்ளிக் கல்வித் துறையிலே சிறந்து விளங்கிக்கொண்டிருக்கின்ற, கல்வித் துறையிலே கல்வி புரட்சியை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள வட்டார கல்வி அலுவலகம் சுமார் 20 ஆண்டுகளாக தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. தனியார் கட்டட உரிமையாளர் அவரது இடத்தைக் கேட்டுவருவதால், வாடகைக் கட்டடத்தில்

இயங்கி வரும் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார கல்வி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தந்து, உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டார கல்வி அலுவலர்களுக்காக புதியதாக கட்டடத்தைக் கட்டுவதை மாற்றி, ஆங்காங்கே பழைய இடங்களிலே இயங்கி வரும் கல்விக் கூடங்களில் பல கட்டடங்கள் உள்ளன. அதைப் பராமரித்து, அங்கேயே ஒரு வட்டார கல்வி அலுவலர் இருப்பாரேயானால், அதுவும் மையப் பகுதியில் அமைந்தால் அந்த வட்டாரத்தில் ஏறத்தாழ 30 பள்ளிகளுக்குச் சென்று அவர் பார்வையிட முடியும். ஆகவே, புதியதாகக் கட்டடம் கட்டுவதைக் காட்டிலும், இருக்கின்ற இடத்தையே பயன்படுத்திட இந்த அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அப்படிச் செய்கின்றபோதுதான், நம்முடைய B.E.O. போன்றவர்கள் அந்த வட்டாரத்தில் 30 பள்ளிகளை மேற்பார்வையிடுகின்ற வாய்ப்பு இருக்கும். ஆகவே, பழைய பள்ளிகளிலேயே இடங்கள் இருக்கின்றபோது, அவர் பள்ளியிலேயே தங்கி, அந்தப் பணிகளை அவர் மேற்கொள்ளும்போதுதான் அந்தப் பள்ளியில் என்ன நடைபெறுகிறது, சுற்றுப்புறங்களில் உள்ள பள்ளிகளில் என்ன நடைபெறுகிறது என்பதை அவரால் யூகிக்க முடியும். எனவே, பழைய கட்டடங்கள் அங்கிருக்கின்ற அந்தப் பள்ளிகளில் உள்ளபோது அதைப் பராமரித்து அதை அலுவலகமாக மாற்றலாமா என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே பல்வேறு கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்றார்கள். அந்த நேரத்திலே மாடத்திலே அந்தத் துறையினுடைய செயலாளர்கள் இதுவரை வரவில்லை. இப்போதுதான் இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தச்

செயலாளர்களுக்கெல்லாம் உத்தரவு வழங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற சமயத்தில் அந்த மாடத்திலே துறைச் செயலாளர்கள், இயக்குநர்கள் வரவேண்டுமென்று நீங்கள் உத்தரவு வழங்கவேண்டும். ஆனால், இதுவரை எந்தச் செயலாளரும் வரவில்லை. இப்போதுதான் இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். எனவே, கேள்வி நேரத்திலே சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் இருக்க வேண்டுமென்று நீங்கள் வலியுறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நான் வலியுறுத்துகிறேன்.*

வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

பாதாள சாக்கடைத் திட்டம்

***2462—திரு. சௌ. தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதி, சேத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ராஜபாளையம் தொகுதி, சேத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்த 16-7-2019 ஆம் தேதியை இறுதி நாளாகக் கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.